**தலைப்பு 297 – கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜுலை 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) வருமானம் பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 திசெம்பர் 30 திகதியில் உள்ளவாறு இணையத்தின் மூலம் பெறுகைகளில் இருந்து அரச வருமானத்திற்குரிய 1/3 பகுதி ரூபா 425,050 தொகை ஆக வேண்டியிருந்த போதிலும், அதனை ரூபா 361,550 என ரூபா 63,500 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 30 திகதி வருமானத்தை கணிக்கும் போது தவறுதலாக 2021 நவம்பர் 30 திகதி கிடைக்கப் பெற்ற வருமானத்தை எடுத்திருந்தமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்ததெனவும், அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | இணையத்தின் மூலம் வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) ACA 1 படிவத்தின் படி, வருமானத் தலைப்பு 20.03.02.10 இன் கீழ் கம்பனிகள் பதிவாளரின் வருமானம் சேகரித்தல் ரூபா 239,440,768 தொகையாக இருந்தது. அவற்றில் ரூபா 119,599,829 தொகை வருமானத்திலிருந்து திருப்ப செலுத்தப்பட்டதென காட்டப்பட்டிருந்த போதிலும் அது நிதிப் பிரமாணம் 118 இற்கு இணங்க வருமானத்தில் இருந்து திருப்பிச் செலுத்துதல் ஒன்று அல்லாததுடன், அது கம்பனிகள் நிதியத்தில் இருந்து திரண்ட நிதியத்திற்கு வழங்கியிருந்த இந்த முற்பணத் தொகை தொடர்பாக ஆண்டின் போது பிரதியீடு செய்யப்பட்ட தொகையாகும். இதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் பெறுவனவுகளின் பெறுமதி முற்பணத்திற்காக எதிரீடு செய்யப்பட்ட தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | வருமானத் தலைப்பு 20.03.02.10 இன் கீழ் கம்பனி பதிவாளரினால் பெறுகைகள் என காட்டப்பட்டிருந்தது உண்மையாகவே சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முற்பணம் என திறைசேரி பிரதிச் செயலாளருக்கு வழங்கப்பட்ட தொகையை எதிரீடு செய்த பின்னர் காணப்பட்ட தொகை எனவும் மற்றும் அதனை மாதாந்தம் திறைசேரி அச்சுப் பதிவுடன் இணக்கம் செய்து வருட இறுதியில் திறைசேரி அச்சுப் பிரதியுடன் இணக்கம் செய்யப்படுவதனால் ACA 1 படிவத்தில் தேறிய வருமானம் என காட்டப்பட்டிருந்தன என | வருமானத் தலைப்புக்கு உரிய ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட வேண்டும். |

**(ஆ) மீண்டுவரும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் உதவிநிதி மானியங்களினதும் மாற்றம்களினதும் பெறுமதி ரூபா 890,499 தொகை அந்தச் செலவின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக வட்டி செலுத்துதலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் வட்டி இவ்வாறு தவறுதலாக வட்டி செலுத்துதல் என பதிவு செய்யப்பட்டிருந்தது. சரியாக காட்டுவதற்கு குறித்துக்கொண்டேன் என. | செலவின விடயம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

**2 நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானக் கூற்றில் (ACA – 1(i)) நிலுவை வருமானத்தை காட்டும் போது முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 894,462,000 இற்கான நிலுவைத் தொகை முன்னைய ஆண்டிற்கு முன்னரான ஆண்டிறுதியில் உள்ளவாறு ரூபா 226,853,316 இற்கான நிலுவைத் தொகை காட்டப்பட்டு அவற்றில் மீளாய்வாண்டின் போது அறவீடுகள் வெவ்வேறாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | சுட்டிக்காட்டியவாறு மீளாய்வாண்டின் போது அறவீடுகள் வெவ்வேறாக காட்டுவதற்கு குறித்துக்கொண்டேன் என. | ஆண்டிற்கான நிலுவைத் தொகை, முன்னைய ஆண்டிற்கான நிலுவைத் தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்கு முன்னரான ஆண்டு வரை நிலுவைத் தொகையில் அறவீடுகள் வெவ்வேறாக வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2007 இன் 07 இலக்க கம்பனிச் சட்டத்தின் 131 இற்கு இணங்க அனைத்து கம்பனிகளும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2007 ஆண்டு முதல் 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்குரிய வருடாந்த அறிக்கைக் கோப்பிலிட்டிருக்காத கம்பனிகள் 498,633 இருந்து அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 2,991,798,000 தொகையாக காணப்பட்டது. 2007 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கோப்பிலிட்டிருந்த வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை முறையே 22,269 , 5,744 மற்றும் 4,277 தொகையாக காணப்பட்டதுடன், நிலுவை வருடாந்த அறிக்கை கோப்பிலிடல் படிப்படியாக குறைந்து காணப்பட்டது. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | வருடாந்த அறிக்கைகள் கோப்பிலிட்டிருக்காத கம்பனிகளை இனங்கண்டு அந்த அறிக்கைகளை கோவைப்படுத்துவதற்காக உட்படுத்தி நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் செயலாற்றுகையை அதிகரிக்க வேண்டும். |

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணம் 880 | அரசாங்கப் பணம், வருமான முத்திரைகள் அல்லது பண்டங்கள் ஒப்புக்கொள்ளல் அல்லது பொறுப்பாக இருத்தல் அவ்வாறின்றேல், அரசாங்க பணம் விநியோகித்தல் அல்லது பண்டங்கள் வழங்குவது தொடர்பான நிருவாக ரீதியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் அந்த அலுவல்கள் சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், உறுதிச் சீட்டுக்களை கையொப்பமிடுபவர்களும் தனது கடமை அலுவல்களை நேர்மையாக நிறைவேற்றுவதற்காக பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும், காசாளர், கணக்காளர் உட்பட உத்தியோத்தர்கள் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை. | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக கண்டறிந்து பிணைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க பிணை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 1.1.7 இற்கு இணங்க இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களின் கடன் மீதி இடமாற்றம் பெற்று 03 மாதங்கள் கடந்த பின்னர் தீர்க்கப்படாத கடன் மீதிகள் என காட்டாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டியிருந்த போதிலும், ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 120,741 இற்கான | இத் தொகையை புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்காக பொது நிதித் திணைக்களத்திடம் வேண்டப்பட்டதுடன், அந்தக் கடன் மீதியை பதிவழிப்பதற்கான தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | தீர்க்கப்படாத கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தொகையொன்று இடமாற்றம் பெற்று 20 வருடங்களுக்கும் 32 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிப் பதிவாளர் திணைக்களம் வறுமையை இல்லாதொழித்தல், அனைத்து விதத்திலும் பகுதிகளிலும் காணப்படும் பட்டினியை ஒழித்தல் மற்றும் நிலைபேறான முழுமையான பொருளாதார அபிவிருத்தியை பாதுகாக்கும் நிறப்பமான மற்றும் ஆக்கபூர்வ தன்மையுடைய வேலையை உறுதிப்படுத்தல், அனைவருக்கும் முக்கியமான தொழிலொன்றினை மேற்கொள்வதற்கு காணப்படும் உரிமையை பாதுகாத்தல், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் என இனங் கண்டிருந்ததுடன், அங்கு பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் கம்பனிகள் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆரம்ப குறிக்கோள் இரண்டு என காட்டப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த இலக்குகளை நெருங்குவதற்காக திணைக்களத்திற்கு விஷேட முயற்சியொன்று மேற்கொள்ள அவசியம் இல்லாமையால் இனங் காணப்பட்ட குறிக்கோள்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட இலக்குகள் மீது மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும். | இனங் காணப்பட்ட நிலைபோறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் மீது மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொழில் முயற்சிகள் மேற்கொள்வதை இலகுவாக்குவதற்காக சுட்டிகளின் உயர்ந்த பெறுமதி ஒன்று இலங்கைக்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் பதிவு செய்யும் பொது ஒப்பந்த வேலை எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகிய இலக்குகளை நெருங்கும் போது அடிப்படையான தரவுகள் மற்றும் இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்புமுனைகள் மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக சுட்டிகளை தெளிவாக இனங்கண்டிருக்கவில்லை. | இந்த விடயங்கள் தொடர்பாக செயற்படுவதற்கு குறித்துக்கொள்கின்றேன் என. | இலக்குகளை நெருங்கும் போது அடிப்படை தரவுகள் மற்றும் இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முனைகள் மற்றும் முன்னேற்றங்களை அளவை செய்வதற்காக சுட்டிகளை தெளிவாக இனங் காண வேண்டும். |

## 5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| e-Roc செயற்திட்டத்தின் ஊடாக திணைக்களத்தின் அனைத்து அலுவல்களும் நிகழ்வுநிலை ஊடாக செயற்படுத்தப்படும் பின்னனியில் தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் பதவி மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவி ஆகிய பதவிகள் இரண்டும் வெற்றிடமாக காணப்படல் முறைமையின் செயலாற்றுகை போலவே அலுவல்களுக்கும் நேரடியான தாக்கம் ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டன. | இந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்து அனுப்பும் படி தொடர்ச்சியாக கடிதங்கள் பொது நிருவாக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | வெற்றிடப் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமனம் செய்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |